<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 239/2015 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.5 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணி | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | திருமலைசாமி | ஜாதி | |
| கிராமம் | : | | இனம் | |
| தாலூக்கா | : | | வயது | |
| Mail ID | : | | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 08.09.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் உடுமலைப்பேட்டை காவல்நிலைய சட்டம் ஒழுங்கு பிரிவில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.12.2024 ம் தேதி ஓய்வு பெற்று விட்டேன். நான் 2011 ம் வருடம் உடுமலைப்பேட்டை காவல் நிலைய குற்ற பிரிவில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 24.09.2011 ம் தேதி இரவு 20.45 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்த போது வசந்தா, வயது 63 க/பெ, சுந்தரம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண். 2457/ 2011 ச/பி.392 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புகாருடன் அசலை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.5 என குறியீடு செய்யப்படுகிறது.** காவல் ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார் மனு யார் காவல் நிலையம் வந்து எழுதி கொடுத்தார்கள்

என்றால் வாதி வசந்தா. அவர் வரும் போதே எழுதி வந்தாரா என்றால் அது பற்றி தெரியாது புகார் வாதி வசந்தா புகாரை கொடுத்தார். சம்பவட நடத்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் உள்ள தூரம் எவ்வளவு என்றால் சுமார் 3 கிமீ தெற்காக இருக்கும். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் வர 10–15 நிமிடம் ஆகும் என்றால் சுமார் 15 நிமிடத்தில் வந்து விடலாம். சம்பவம் எப்போது நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளிர்கள் என்றால் சுமார் மாலை 6.30 மணியளவில்.

2. காலம் 7 ல் ஒரு மோட்டார் சைக்கிளில் அடையாளம் தெரியாத நபர் என்று சொல்லியுள்ளிர்கள் என்றால் சரிதான். காலம் 8 ல் வாதியால் தாமதம் எனறு சொல்லியுள்ளிர்கள் என்றால் சரிதான். காலம் 9 ல் செயின் மாடல் மற்றும் வடிவத்தையோ குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.
3. நீதிமன்றத்தில் உள்ள ஆவணத்தில் முதல் தகவல் அறிக்கையில் உள்ள எழுத்தில் உள்ள கையெழுத்து 20 என போட்டு அது 4 என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் திருத்தப்பட்டுள்ளது, ஆனால் 4 என்று என்று தெரியவில்லை. . முதல் தகவல் அறிக்கையில் வண்டி எண் ,கலர் மற்றும் மாடல் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வண்டியைபற்றி விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். விசாரித்ததற்ககான காரணம் பற்றி சொல்ல இயலுமா என்றால் என்னுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டது அல்ல. புகார் மனுவிலும் முதல் தகவல்அறிக்கையிலும் சம்பவ நபர்களின் நிறங்கள் மற்றும் வயது பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஒல்லியா கருப்பாக பேண்ட் சர்ட் அணிந்திருந்த ஒரு நபர் மற்றும் வெள்ளை வேஷ்டி கட்டியிருந்த ஒரு நபர் என்று புகாரில் சொலலியுள்ளது. வயது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.
4. புகாரில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரியல்ல. நா என்பதை அடித்து மகளிர் நல அமைப்பாக என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் கடந்த 2005 ல் ஊரக என்று எழுதப்பட்ட பின் அதன் பின்னிட்டு என்று எழுதி அடிக்கப்பட்டுள்ளது. புகாரில் கனம் நீதிமன்ற நீதிபதியின் கையொப்பத்தில் 26.9.2011 ம் தேதி என்று உள்ளதா என்றால் ஆமாம். வழக்கில் புகார் மற்றும முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சனிக்கிழமை இரவு என்பதால் ஞாயிற்று கிழமை அனுப்பிவைக்கப்பட்டது. உடுமலை காவல் நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் சுமார் 500 அடி தூரம் என்றால் சரிதான். 5 நிமிடத்தில் நடந்து வரலாம் என்றால்

சுமார் 10 நிமிடம் ஆகும்.

5. சொன்ன தேதியில சொன்ன இடத்தில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து கனம் நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு ஆவணங்கள் அனைத்தும் தயார் செய்து சமர்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகாரை பெற்று புகார்தாரரிடம் விவரம் கேட்டு முதல் தகவல் அறிக்கை தயார்செய்யப்பட்டது என்றால் நான் புகார்தாரரை விசாரிக்கவில்லை. புகார் பெற்று முதல் தகவல் அறிக்கை தயார் செய்யும் போது காவல் ஆய்வாளர் எங்கருநதார் என்றால் அது பற்றிய விவரம் தெரியவில்லை.
6. முதல் தகவல் அறிக்கை தயார் செய்து காவல் ஆய்வாளரிடம் எப்போது ஒப்படைத்திர்கள் என்றால் 24.09.2011 ம் தேதி இரவு சுமார் 21.30 மணி இருக்கலாம். புகார்தாரரரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்றால் நான் புகார்தாரரை விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் அதன் பின்னிட்டு தான் ஒப்படைத்திர்கள் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக புலன் விசாரணை அதிகாரி உங்களை விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தாரா என்றால் அது பற்றி தெரியாது , என்னை காவல் ஆய்வாளர் விசாரித்ததார். வழக்கிற்காக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.